### சென்னை எழும்பூரில் உள்ள

# குழந்தைகள் நல மருத்துவமனையில் முதல்வர் விஜய் திடீர் ஆய்வு

► எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் நேற்று ஆய்வு செய்த முதல்வர் விஜய், பிரசவ வார்டில் குழந்தைகளை கையில் தூக்கி கொஞ்சியதுடன், தாய்மார்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

**சென்னை, ஜூலை 9:** எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் முதல்வர் விஜய் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவமனை வளாகத்திற்குள் நுழைந்த முதல்வர் விஜய், நேராக பிரசவ அறை, பச்சிளம் குழந்தைகள் பிரிவு மற்றும் அவசர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட முக்கிய இடங்களுக்குச் சென்றார். தாய்மார்களை சந்தித்து, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். குழந்தைகளை கையில் தூக்கி கொஞ்சினார்.

சிலநாட்களுக்கு முன்பு, எழும்பூர் மருத்துவமனையில் ஊழியர்கள் சிலர் லஞ்சம் வாங்குவதாகவும், நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் தரமாக இல்லை என்றும் சமூக வலைதளங்களில் வீடியோ வெளியானது. இதை தொடர்ந்தே, முதல்வர் ஆய்வு நடத்தியதாக கூறப்படுகிறது. ஆய்வின் போது, அமைச்சர் அருண்ராஜ், சுகாதாரத்துறை செயலாளர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.


**வடக்கு மத்திய ரயில்வே**

Gem ஏல அறிவிப்பு 10/2026 — தேதி: 06.07.2026

**Gem ஏல அறிவிப்பு**

GeM ஏல எண்: GEM/2026/B/7685691, நாள்: 03.07.2026 | அளவு: 5200 ஜோடிகள்

விவரம்: ரயில் தண்டவாளப் பணியாளர்களுக்கான பாதுகாப்புக் காலணிகள்.

முன்வைப்புத் தொகை (ரூ): 101230/– | GeM ஏலம் தொடங்கும் தேதி: 28.07.26

குறிப்பு: (1) மேற்கண்ட GEM ஏலம் பற்றிய முழுமையான தகவல்கள் GEM இணையதளத்தில் அதாவது http://www.gem.gov.in இல் கிடைக்கின்றன. (2) மின்–ஏலங்களின் வடிவத்தில் இல்லாத ஏலங்கள் மேற்கண்ட டெண்டர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படாது. இதற்காக, விற்பனையாளர்கள் GEM இணையதளத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். (3) நிதி விகிதப் பக்கத்தில் உள்ளிடப்பட்ட மற்றும் முறையாக டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட விகிதங்கள் பரிசீலிக்கப்படும். விகிதங்கள் மற்றும் வேறு எந்த படிவத்திலும் / லெட்டர் ஹெட்டிலும் விற்பனையாளர்களால் இணைக்கப்பட்டிருந்தால், அவை உடனடியாக புறக்கணிக்கப்படும் மற்றும் பரிசீலிக்கப்படாது. (4) இணைக்கப்படும் ஆவணங்கள் அவற்றின் உள்ளடக்கத்தில் கையொப்பமிடப்பட வேண்டும். ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், GEM இணையதளத்தில் உள்ள உதவி மையத்தை அணுகலாம். 1548/26 (C)

North central railways www.ncr.indianrailways.gov.in @CPRONC

**வடக்கு மத்திய ரயில்வே**

L.No.: JHS–ELG–W–T–05–2026–27 — தேதி: 05.07.2026

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பாக, ஜான்சியில் உள்ள வடக்கு மத்திய ரயில்வேயின் முதுநிலை கோட்ட மின்பொறியாளர் (பொது), பின்வரும் பணிக்காக "திறந்த டெண்டரை" ஆன்லைன் (இ–டெண்டர்) மூலம் கோருகிறார்.

ஒப்பந்தப்புள்ளி எண்: JHS–ELG–W–T–05–2026–27

பணி விவரம்: பகுதி A ஜான்சி பிரிவு: அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் ஜான்சி கோட்டத்தில் 03 எண்ணிக்கை 12.0 மீ அகலமுள்ள நடைமேம்பாலங்களை லலித்பூர், ஓரை மற்றும் தாதியா ஆகிய ரயில் நிலையங்களில் அமைத்தல், பகுதி– B: ஜான்சி பிரிவு: அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் ஜான்சி கோட்டத்தில் 02 எண்ணிக்கை 12.0 மீ அகலமுள்ள நடைமேம்பாலங்களை திகாம்கர், மகாராஜா சத்ரஸல் சத்ரபூர் ரயில் நிலையங்களில் அமைத்தல்.

டெண்டர் மதிப்பு: ரூ. 46,63,365/–மட்டும் | ஏலப் பாதுகாப்பு: ரூ.93,300/–மட்டும்

நிறைவடையும் காலம்: 06 மாதங்கள் | டெண்டர் முடிவடையும் தேதி: 27/07/2026, 15:00 மணி.

27.07.2026 அன்று 15:00 மணி வரை இணையவழியில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கலாம். முழு விவரங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு, இந்திய ரயில்வேயின் இணையதளமான http://www.ireps.gov.in –ஐப் பார்க்கவும். 1550/26 (PH)

North central railways www.ncr.indianrailways.gov.in @CPRONCR

**தெற்கு ரயில்வே**

(கதி சக்தி / மதுரை)

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:GS-MDU-05-2026 தேதி: 07.07.2026

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும், தலைமை செயல்திட்ட மேலாளர், கதி சக்தி, தெற்கு இரயில்வே, மதுரை - 625 016 அவர்கள், எமது வலைதளம் www.ireps.gov.in-ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி (NIT) பின்வரும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். ஒப்பந்தப்புள்ளிக்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளியாளர்கள் / ஒப்பந்தக்காரர்கள் www.ireps.gov.in வலைதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும்.

| ஒப்பந்தப் புள்ளி எண். | பணி பற்றிய விவரம் | தோராய ரொக்க மதிப்பு ₹ | ஒப்பப்புள்ளி காப்புநுதி தொகை ₹ | பணியை முடிப்பதற்கான காலம் மாதங்களில் | ஒப்பந்தப் புள்ளி மூடப்படும் தேதி |
|---|---|---|---|---|---|
| GS-MDU-2026-05 | 1. மதுரை கோட்டம் - திண்டுக்கல் சந்திப்பு இரயில் நிலையத்தில் 3 லிப்ட்களும் விருதுநகர் சந்திப்பு இரயில் நிலையத்தில் 3 லிப்ட்களும் அமைத்தல் (இரண்டும் NSG 3 வகை) 2. மதுரை கோட்டம் - திண்டுக்கல் சந்திப்பு இரயில் நிலையத்தில் (NSG 3 வகை) 3 எஸ்கலேட்டர்கள் அமைத்தல் | 3,54,85,878.75 | 7,09,700 | எட்டு | 30.07.2026 |

மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.ireps.gov.in

இதன் பின்னர், ஏதேனும் மாற்றங்கள் அல்லது மாறுபாடு தொடர்பாக இணையதளத்தில் திருத்தம் ஏதேனும் வெளியிடப்பட்டுள்ளதா என்று அவ்வப்போது பார்த்து வர வேண்டியது ஒப்பந்தப்புள்ளியாளர்கள் பொறுப்பு ஆகும். அவர்கள் தங்கள் ஒப்பந்தப்புள்ளியை பதிவேற்றம் செய்யும் தருணத்தில் அவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

துணை தலைமை பொறியாளர்,
கதி சக்தி, மதுரை

**Central Bank of India** — சेन्ट्रल बैंक ऑफ़ इंडिया — சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா — 1911 से आपके लिए 'केंद्रित' — 'CENTRAL' TO YOU SINCE 1911

அரும்பாக்கம் கிளை
06, அமராவதி நகர் மெயின் ரோடு, அரும்பாக்கம், சென்னை - 600 106, Ph: 044-23464272
E-mail ID: bmchen4956@centralbank.bank.in

**SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

**சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா**-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு அந்த சொத்து "**உள்ள இடத்தில் உள்ளவாறு**", "**உள்ளது உள்ளவாறு**" மற்றும் "**எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே**" என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக https://baanknet.com என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

**கடன்தாரர்: Mr.K.சரவணன்,** S/o.கிருஷ்ணன், 2/173, பல்லவன் நகர், ஏரிக்கரை தெரு, நெற்குன்றம், சென்னை-600107 **மேலும் குடியிருப்பு முகவரி,** எண்.28, ஏரிக்கரை தெரு, பல்லவன் நகர், நெற்குன்றம், சென்னை-600107 **மேலும் குடியிருப்பு முகவரி,** எண்.1/138, கட்டபொம்மன் தெரு, பல்லவன் நகர், நெற்குன்றம், சென்னை-600107 **மேலும் குடியிருப்பு முகவரி,** கதவு எண்.J-70, பெரியார் காய்கறி மார்கெட் தெரு, கோயம்பேடு, சென்னை, **மேலும் குடியிருப்பு முகவரி,** எண்.1, 2வது குறுக்கு தெரு, அரசு பள்ளி அருகில், வெங்காயமண்டி, நெற்குன்றம், சென்னை-600107 **மேலும் அலுவலக முகவரி, M/s.STS எண்டர்பிரைசஸ்,** கடை எண்.L-78, பெரியார் காய்கறி மார்கெட் தெரு, கோயம்பேடு, மொத்தவிலை மார்கெட் காம்ப்ளக்ஸ், கோயம்பேடு, சென்னை-600092 **ஜாமீன்தாரர்: Mr.S.ஜெகதீஸ்வரன்,** S/o.சுப்பிரமணி, எண்.2/158, அருண் ஃப்ளாட்ஸ், B ப்ளாக் கதவு B, ஏரிக்கரை தெரு, நெற்குன்றம், சென்னை-600107

**கோரிக்கை அறிவிப்பு தேதி: 17.06.2022 / கடன் நிலுவைத்தொகை: 07.07.2026** அன்றுள்ளபடி ₹ 61,99,914.17 சட்டரீதியான கட்டணங்கள், வட்டி, செலவுகள் தவிர்த்து; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 17.11.2022**

**அடமானத்தில் உள்ள சொத்து விவரம்**

**சொத்தின் உரிமையாளர் Mr.K.சரவணன்.** மத்திய சென்னை பதிவு மாவட்டம், அண்ணாநகர் சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, T.S.எண்.2 பகுதி, ப்ளாக் எண்.65, **கடை எண்.L-78, கோயம்பேடு மொத்த மார்க்கெட் காம்ப்ளெக்ஸ் ஃபெரியபில் மார்க்கெட் தற்போது பெரியார் காய்கறி மார்க்கெட் என அழைக்கப்படுகிறது, கோயம்பேடு கிராமம், முன்னர் எழும்பூர்-நுங்கம்பாக்கம் தாலுகா, தற்போது அமிஞ்சிக்கரை தாலுகா** என்னும் முகவரியிலுள்ள **196.78 சதுர அடி நிலம் மற்றும் 155.53 சதுர அடி அல்லது அதற்கு ஏறக்குறைய கடை கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: கடை எண்.L-80, தெற்கு: கடை எண்.L-76, கிழக்கு: ஷாப்பிங் தெரு, மேற்கு: சர்வீஸ் தெரு.

| | | | |
|---|---|---|---|
| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 66,50,000/- | டேவிளிர்த்தொகை | ₹ 6,65,000/- |
| ஏல உயர்வு தொகை | ₹ 20,000/- | சுவாதீனம் வகை: நேரடியான (Physical) | |
| இ-ஏல தேதி/நேரம் | 12.08.2026 | காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை | |

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 12.08.2026 மாலை 3.00 மணிக்குள்

சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 11.08.2025 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

**மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்,** இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: https://baanknet.com **(அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.bank.in

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **பிராந்திய அலுவலகம், மீட்பு முதன்மை மேலாளர்** Mob: 88097 17676, **அரும்பாக்கம், கிளை மேலாளர்,** Mob: 89399 62701, அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

**SARFAESI சட்டம், 2002 விதி 8(6) & 9(1)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு**

மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 07.07.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா


# சென்னை அமர்வு நீதிமன்றங்களுக்கு அரசு வழக்கறிஞர்கள் நியமனம்

**அரசாணை வெளியீடு**

**சென்னை, ஜூலை 9:** சென்னை மாவட்ட அமர்வு நீதிமன்றங்களில் அரசு தரப்பில் ஆஜராவதற்காக அரசு வழக்கறிஞர்களை நியமனம் செய்து தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட அரசாணை விபரம் வருமாறு: தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட நீதிமன்றங்களுக்கு அரசு வழக்கறிஞர்கள் நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்களை வரவேற்று அனைத்து மாவட்ட கலெக்டர்களும் அறிவித்தனர். அதன் அடிப்படையில் வந்த விண்ணப்பங்களை பரிசீலித்து சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள், சிறப்பு நீதிமன்றங்களுக்க அரசு வழக்கறிஞர்கள் தற்காலிகமாக 6 மாதங்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

சென்னை மாநகர தலைமை குற்றவியல் வழக்கறிஞராக எஸ். அந்தோனி வெலிங்டன் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாவட்ட அரசு பிளீடராக கே.பி.ஜோதீஸ்வரன், கூடுதல் அரசு பிளீடராக பி.ஆர்.கவுதமன், இ.ரவிச்சந்திரபாபு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றங்களுக்கு குற்றவியல் வழக்கறிஞர்கள் பி.கோபிலதா, டி.பாலசுப்பிரமணியம், எஸ். வேல்முருகன், வி.தயாசங்கர், எஸ்.அசோக்குமார், ஜி.நவீன், ஆர்.கே.பிரதீப்ராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். போதை பொருள் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்ற அரசு சிறப்பு வழக்கறிஞராக தன்ராஜ், போதை பொருள் தடுப்பு வழக்குகளுக்கான முதலாவது கூடுதல் நீதிமன்றத்திற்கு டி.ராஜரத்தினம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதல் அரசு பிளீடர் மற்றும் குற்றவியல் வழக்கறிஞர்களாக எ.அரவிந்த் விக்னேஷ், ஆர்.நரேஷ் குமார், டி.ரவிக்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகளிர் நீதிமன்ற அரசு சிறப்பு வழக்கறிஞராக ஜி.பி.விண்ணொலி நியமிக்கப்பட்டுள்ளார். அல்லிகுளம் கூடுதல் அமர்வு நீதிமன்றங்களுக்கு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர்களாக கே.நரேந்திரன், எஸ்.பிரபாகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிதி மோசடி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற அரசு சிறப்பு வழக்கறிஞராக எஸ்.பேச்சிமுத்துக்குமார் (குற்றவியல்), எஸ்.விஜயகுமார் (சிவில்) ஆகியோரும், தடா சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளுக்கான மாவட்ட நீதிமன்றத்திற்கு அரசு சிறப்பு வழக்கறிஞராக பால்ராஜ், பொடா சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்குகளுக்கான பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்திற்கு அரசு சிறப்பு வழக்கறிஞராக எஸ்.முத்துகூடலிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனம் முழுக்க முழுக்க தற்காலிகமாது. எந்த நேரத்திலும் அவர்கள் பணியிலிருந்து எந்த முன் அறிவிப்புமின்றி நீக்கம் செய்யப்படலாம்.

இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

# இங்கு அரசு வழக்கறிஞர் பதவி விற்கப்படும்

**கல்லா கட்டும் முக்கிய பிரமுகர்கள்**

**சென்னை, ஜூலை 9:** அரசு வழக்கறிஞர்கள் பதவிக்கு பெரிய அளவில் பேரம் பேசப்படுவது நீதிமன்ற வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு கட்சியும் ஆட்சிக்கு வந்தவுடன் முதலில் நியமனம் செய்வது அரசு வழக்கறிஞர்கள் பதவிகள்தான். அதாவது அரசு தரப்பில் ஆஜராக ஏற்கனவே ஆட்சியில் இருந்த அரசு வழக்கறிஞர்கள் இருந்தால் சிக்கல் ஏற்பட்டுவிடும். அதனால் முதலில் இந்த விஷயத்தில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

ஆனால், தவெக அரசு வந்து இரண்டு மாதங்களாகியும் இதுவரை முழு அளவில் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படவில்லை. தற்காலிகமாக சென்னை உயர் நீதிமன்றத்திற்கு கொஞ்சம் வழக்கறிஞர்களும், மதுரை கிளைக்கு சில வழக்கறிஞர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முழுவ அளவில் நியமிக்கப்படாததற்கு அரசு வழக்கறிஞர்கள் பதவி விற்பனை செய்யப்படுவதே காரணம் என்று வழக்கறிஞர்கள் மத்தியில் பேசப்படுகிறது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் ஆஜராக அட்வகேட் ஜெனரல், கூடுதல் அட்வகேட் ஜெனரல், அரசு பிளீடர், கூடுதல் அரசு பிளீடர்கள், சிறப்பு அரசு வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள் (சிவில்), மாநில தலைமை குற்றவியல் வழக்கறிஞர்கள், கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள் (கிரிமினல்), உயர் நீதிமன்ற மதுரை கிளைக்கு அரசு பிளிடர், கூடுதல் அரசு பிளீடர்கள், குற்றவியல் வழக்கறிஞர்கள் என மொத்தம் 150 பேர் அரசு வழக்கறிஞர்கள் உள்ளனர்.

அதேபோல் மாநிலம் முழுவதும் உள்ள 38 வருவாய் மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள், தாலுகா அளவிலான நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றில் அரசு வழக்கறிஞர்களாக சுமார் 1100 பேர் நியமனம் செய்யப்பட வேண்டும். ஆனால், இதுவரை இந்த நீதிமன்றங்களுக்கு பத்து சதவீதத்திற்கும் குறைவான வழக்கறிஞர்களே அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாமதத்திற்கு காரணம் அரசு வழக்கறிஞர்கள் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் தகுதி, அனுபவம் குறித்த ஆய்வு நடைபெறுவதுதான் என்று அரசு தரப்பில் கூறப்பட்டாலும் அரசு வழக்கறிஞர் பதவிக்கு பணம் விளையாடுவதே காரணம் என்று தெரியவருகிறது.

ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்தின் அரசு வழக்கறிஞர்கள் பதவிக்கும் குறைந்த பட்சம் ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.30 லட்சம் வரை பேரம் பேசப்படுவதாக கூறப்படுகிறது. ஏற்கனவே அதிமுக உறுப்பினர்களாக இருந்து தவெக ஆட்சிக்கு வந்தவுடன் அந்த கட்சிக்கு மாறியவர்கள் லட்சக் கணக்கில் பணத்தை கொடுத்து அரசு வழக்கறிஞர்கள் பதவியை வாங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பெரும்பாலும் அரசு வழக்கறிஞர் பதவியை வாங்க வேண்டும் என்பதற்காகவே அதிமுக உள்ளிட்ட கட்சிகளிலிருந்து தவெகவுக்கு வழக்கறிஞர்கள் படையெடுத்துள்ளனர். அவர்கள் தங்களுக்கு பதவி வாங்குவதற்காக லட்சக்கணக்கில் பணத்தை கொடுக்க முன்வந்துள்ளனர். பலர் ஏற்கனவே பணத்தை கொடுத்த பதவிகளையும் வாங்கி விட்டனர்.

தற்போது தரப்படும் அரசு வழக்கறிஞர் பதவி வெறும் 6 மாதத்திற்கான தற்காலிக பதவிதான் என்று துறை அமைச்சர் கூறியுள்ளார். அரசு வழக்கறிஞர் நியமன அரசாணைகளிலும் தற்காலிக பணிதான், எந்த நேரத்திலும் பதிவியிலிருந்து முன் அறிவிப்பு இல்லாமல் நீக்கப்படலாம் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியென்றால் 6 மாத தற்காலிக பதவிக்கு லட்சக்கணக்கில் பணத்தை கொடுக்க முன்வருவார்களா?. ஒருவேளை தற்காலிக பணியாக இருந்தாலும் கொடுத்த பணத்தை எப்படி சம்பாதிப்பது என்ற கேள்வியும் எழுகிறது. அதனால், தற்காலிகம் என்பது பெயரளவுக்குத்தான் என்பது தெரிகிறது.

இந்த பண பேரத்தில் கட்சியின் மிக முக்கிய பிரமுகருக்கு முழு தொடர்பு உள்ளதாகவும், அவர் பெயரை சொல்லியே பணம் வாங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இந்த விஷயம் தற்போது தமிழக அரசியலில் பெரும் புயலை கிளப்பியுள்ளது.


**அடையாளம் தெரியாத சடலம்**



பெயர் மற்றும் சொந்த ஊர் உறுதிப்படுத்தப்படாத, சுமார் 50 வயது மதிக்கத்தக்க, வெளி மாநில புலம்பெயர் தொழிலாளி என சந்தேகிக்கப்படும் அடையாளம் தெரியாத நபர் ஒருவர், 08/04/2026 ஆம் தேதியன்று சொரனூர் ரயில் நிலைய நடைமேடையில் மாரடைப்பு காரணமாக மரணமடைந்தார்.

சொரனூர் ரயில்வே காவல் நிலையத்தில், குற்ற எண்: 110/2026, பிரிவு 194 BNSS இன் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நபர் குறித்து ஏதேனும் தகவல் தெரிந்தவர்கள், கீழே உள்ள தொலைபேசி எண்களுக்குத் தயவுசெய்து தெரிவிக்கவும்.

அடையாள குறிகள்:
வலது முழங்காலுக்கு மேலே ஒரு தழும்பு.
இடது கை தசையில் ஒரு தழும்பு.

- ஜபி, ரயில்வே, சொரனூர்: 9961020100
- துணை காவல் கண்காணிப்பாளர், பாலக்காடு ரயில்வே : 9497990227
- எஸ்.எச்.ஓ., ரயில்வே போலீஸ் ஸ்டேஷன், சொரனூர்: 9497981120

RO.NO:270/F2/2026/I&PRD


### ஆர்.கே.நகர் தொகுதி தேர்தல் வெற்றியை எதிர்த்து வழக்கு

# அமைச்சர் மரிய வில்சனுக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ்

**சென்னை, ஜூலை 9:** ஆர்.கே.நகர் தொகுதி தேர்தல் வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட தேர்தல் வழக்கில் தமிழக அமைச்சர் மரிய வில்சன் பதிலளிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட மரிய வில்சன் வெற்றி பெற்றார். இவரது தேர்தல் வெற்றியை செல்லாது என்று அறிவிக்க கோரி அந்த தொகுதி வாக்காளர் மருது கணேஷ் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்திருந்தார். இதேபோல், திருவெறும்பூர் தொகுதியில் தவெக எம்எல்ஏ நவல்பாட்டு விஜி என்கிற எஸ்.விஜயகுமார் வெற்றியை எதிர்தது திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ், திண்டுக்கல் தொகுதியில் திமுக முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமியின் மகனான ஐ.பி.செந்தில்குமாரின் வெற்றியை எதிர்த்து தவெக வேட்பாளர் நாசிர் ராஜா ஆகியோர் தேர்தல் வழக்குகளை தொடர்ந்திருந்தனர்.

திருவள்ளூர் தொகுதி தவெக எம்எல்ஏ டி.அருண்குமார் வெற்றியை எதிர்த்து திமுக வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரனும், மொடக்குறிச்சி தொகுதி தவெக எம்எல்ஏ டி.சண்முகம் வெற்றியை எதிர்த்து வாக்காளர் கே.பெரியசாமியும், பர்கூர் தொகுதி அதிமுக எம்எல்ஏ ஆர்.சி.கோவிந்தராஜன் வெற்றியை எதிர்த்து வாக்காளர் சி.கீதா என்பவரும் தேர்தல் வழக்குகளை தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதி கே.குமரேஷ் பாபு, தேர்தல் வழக்குகள் தொடர்பாக அமைச்சர் மரிய வில்சன் உள்ளிட்ட 6 எம்எல்ஏக்களும் 4 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளார்.

இதேபோல, கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தவெக நிர்வாகியும், அமைச்சருமான செங்கோட்டையன் வெற்றியை எதிர்த்து அதிமுக கவைசேர்ந்த வி.பி.பிரபு தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இவை உள்ளிட்ட தேர்தல் வழக்குகளை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், வழக்குகளை வெவ்வேறு தேதிகளுக்கு தள்ளிவைத்தார். மேலும், தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்தல் வழக்குகள் ஒவ்வொரு புதன்கிழமையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் நீதிபதி தெரிவித்துள்ளார்.


**pnb Housing Finance Limited** — Ghar Ki Baat

**பிற்சேர்க்கை–IV–A அசையாச் சொத்து(கள்) மின்–ஏலம் பொது விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு**

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ பவன், 22, கஸ்தூரபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை முகவரி: C 45, முதல் தளம் , திரு. வி.கா. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட். கிண்டி. சென்னை – 600032, தமிழ்நாடு | கிளை முகவரி: 1வது தளம். ஜிஎஸ்டி சாலை, தாம்பரம் மேற்கு, சென்னை – 600045, தமிழ்நாடு | கிளை முகவரி: C 45, முதல் தளம் , திரு. வி.கா. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட். கிண்டி, சென்னை – 600032, தமிழ்நாடு

இதன்மூலம் பொதுமக்களுக்கும் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வமைக்க கவாதீனம் நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்ட உள்ளது.

நாளது தேதியத் திருத்தப்படாத கடனீட்டுக் கொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்து முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, தெரிந்தது அல்லது தெரியாதது), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையிற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை